**சீதாவகபுர நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந்திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சீதாவகபுர நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 62,500 ஆன நிலத் தராசின் பெறுமதி ரூபா 6,250 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணத்தால் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ரூபா 56,250 இனால் குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்ய்பட்ட ரூபா 109,800 பெறுமதியான மரம் வெட்டும் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 122,000 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணத்தால் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ரூபா 12,000 இனால் அதிகரித்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 288,002 பெறுமதியான 02 நீர்ப் பம்பிகள் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் தளபாடம் மற்றும் பொருத்திகள் கணக்கில் ரூபா 232,866 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கணக்கு

ரூபா 288,002 இனால் அதிகரித்தும் தளபாடம் மற்றும் பொருத்திகள் கணக்கு ரூபா 232,866 இனால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 221,000 பெறுமதியான நீர் பம்பிகளுக்காக 02 பெனல் போட்கள் மற்றும் ரூபா 3,020 பெறுமதியான ரவுடரின் கூட்டுப் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) உள்ளூராட்சி திணைக்களத்தினால் மீளளிப்பு செய்யப்பட்ட ஆதன கடன் வட்டியின் மீளளிப்பு தொகையான ரூபா 164,089 தொகை வருமான உதவிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான வருமானம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டினுள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 129,837 தொகை பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 186,184 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வைப்புக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 11,250 பெறுமதியான 5 வில்பரோக்களின் பெறுமதி மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிராமையால் மோட்டார் வாகன மற்றும் வண்டிக் கணக்கு அந்த பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரியதாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி ரூபா 52,862,981 ஆக இருந்ததுடன், அதனோடு தொடர்புடைய பயன்பாட்டு பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 51,941,561 ஆனமையால் ரூபா 921,420 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 தீர்க்கப்படாத கணக்குகள்

(அ) நீண்ட காலமாக தீர்க்கப்படாது தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 3,071,646 கூட்டுத்தொகையான மீதியை மீளாய்வாண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 98,205,268 தொகையான கடன்பட்டோர் மீதியினுள் முன்னைய ஆண்டுகளுக்கு மற்றும் நடப்பாண்டிற்குரிய அத்தியாவசிய சேவைகளை பெற்றுக்கொண்டமைக்காக அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 64,299,416 கூட்டுத்தொகையான மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது மொத்த கடன்பட்டோரின் 65 சதவீதமாகும். நடப்பாண்டிலும் அந்த மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 15,350,876 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்வு சான்றுகள் இல்லாதிருந்தமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,647,822 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,122,703 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டினுள் திண்மக் கழிவிற்காக பெறப்பட்ட ரூபா 150,000 தொகையும், 2011 ஆம் ஆண்டில் ‘‘ஸ்வர்ணபுர’’ போட்டியில் முதலாவது இடத்தினை பெற்றமைக்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 550,000 தொகை மற்றும் ‘‘ஸ்வர்ணபுர’’ போட்டியில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக பெறப்பட்ட ரூபா 300,000 தொகையும் 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் எதுவித பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3 வருமான நிருவாகம்

### 3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | பட்டியலிடல்கள் | உள்ளபடியான பெறுவனவு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| -------------------- | ------------------- | ------------------ | ---------------- | -------------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,610,272 | 19,512,094 | 15,751,082 | 10,159,184 |
| கடை வாடகை | 3,054,217 | 18,196,985 | 17,527,829 | 3,723,373 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 43,543 | 311,655 | 311,655 | 43,543 |
| வியாபார வரி | 46,915 | 676,500 | 675,500 | 46,915 |

### 3.1.1 வீதவரியும் வரியும்

--------------------------------

மீளாய்வாண்டின் வீதவரி பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 35 சதவீதமான ரூபா 6,771,704 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய திரண்ட நிலுவை வீதவரித் தொகை ரூபா 10,159,184 ஆகும்.

### 3.1.2 நிலுவை கடை வாடகை

----------------------------------------

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 48 கடைத் தொகதிகளில் இருந்து 05 மாதங்களை விஞ்சியதாக நிலுவையாக இருந்த கடை வாடகை தொகை ரூபா 897,125 ஆகும். இதன் கடை உரிமையாளர்கள் தொடர்பில் குத்தகை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 இறைச்சி விற்பனை நிலைய வரி

------------------------------------------------------------

சபைக்கு செந்தமான புவக்பிட்டிய ஞாயிறு சந்தையின் பன்றி இறைச்சி விற்பனை நிலையம் மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையம் 2015 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்கப்படாமையின் காரணத்தால் சபைக்கு இழப்பாகியிருந்த வருமானம் ரூபா 117,200 ஆகும்.

### 3.1.4 அனுமதிப்பத்திர கட்டணம்

-----------------------------------------

2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் (இ) பிரகாரம் வியாபாரங்களுக்காக சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வியாபார நிலையங்கள் தொடர்பில் களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டிற்கமைய சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 113 ஆக காணப்பட்டது.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------------------

#### (அ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

குப்பை கிடங்கில் குப்பைகளை நசிப்பதற்காக கூறுவிலைகள் கோரப்படாமலும் உடன்படிக்கை கைச்சாத்திடாமலும், PC 60 அளவிலான ஸ்கவேட்டர் இயந்திரமொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு 2015 இன் சனவரி முதல் ஏப்ரல் வரையிலும் மணித்தியாலமொன்றிற்கு ரூபா 750 படி 123.3 மொத்த மணித்தியாலங்களுக்கு ரூபா 92,475 தொகையும், 2015 மே முதல் யூலை வரையிலும் மணித்தியாலமொன்றிற்கு ரூபா 2,200 படி 399 மொத்த மணித்தியாலங்களுக்கு ரூபா 877,800 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

#### (ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபை வங்கிக் கணக்கு

-------------------------------------------------------------------------

1993 நவம்பர் 18 ஆந் திகதிய திட்டமிடல் சுற்றறிக்கை 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக பேணிச் செல்லப்படும் வங்கிக் கணக்கிற்கு 1991 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 315,321 தொகையான பணம் கிடைத்திருந்தது. இந்த பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன் அங்கீகாரம் பெறப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்த முடியுமெனினும், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 315,321 தொகை எவ்விதமான அபிவிருத்தி பணியிலும் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் உப கட்டளைகள் எதுவும் விதிக்கப்படாமல் 2015 சனவரி முதல் நவம்பர் வரை தனியார் வாகன தரிப்பிடங்களின் அடிப்படையில் அறவிடப்படும் கட்டணங்களும் தூக்கியெறியப்படும் உணவுகளை (உக்கக்கூடிய கழிவு) விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம் மற்றும் மீள் சுழற்சி வருமானமாக ரூபா 3,129,653 உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் தாபனவிதிக்கோவையின் V அத்தியாயத்தில் 60 வயதினை பூர்த்தி செய்தமையின் அடிப்படையில் ஓய்வூதியம் பெறும் ஏற்பாடுகளுக்கு முரணாக 60 வயதினை விஞ்சிய அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 60 – 80 வயதிற்கு இடைப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் 18 ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 12,339,783 ஆன தொகை சம்பளங்களாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் தீர்க்கப்படாதுள்ள ரூபா 1,029,055 தொகையான முற்பண மீதியினுள் 06 வருடங்கள் முதல் முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 842,357 தொகையான முற்பண மீதியொன்று காணப்பட்டது.

(ஈ) வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை கடந்த ரூபா 43,872,348 தொகையான வைப்புக்கள் தொடர்பில் இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 வாகனக் கட்டுப்பாடு**

------------------------------

(i) பெறுமதி இனங்காணப்பட முடியாத வெகுமதியாக கிடைத்திருந்த பெக்கோ லோடர் மற்றும் காலப்பகுதி மற்றும் பெறுமதி இனங்காண முடியாத பதிவு செய்யப்பட்டிராத போப்கெட் இயந்திரமொன்று சபைக்கு சொந்தமாக காணப்பட்டது.

(ii) பல வருடங்களாக குப்பை அகற்றும் பவுசரில் இயந்திர கோளாறு ஒன்று அவ்வப்போது ஏற்பட்டிருந்தமையால் குப்பை வண்டி வருமானம் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் 79 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி பழுதுபார்த்தல்களுக்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மகேந்ரா கெப் வண்டியை பழுது பார்ப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லையினை விஞ்சியிருந்த போதிலும், உடன்படிக்கையின் 05 ஆம் இலக்கத்தின் பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 226,050 தொகையான முற்சக்கர வண்டியொன்றும் ரூபா 328,000 தொகையான இசுசு ரக கெப் வண்டியொன்றும் டெப்போ டிரக்டர் வண்டியொன்றும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலையில் சபையின் வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**5. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**5.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பல்வேறு நிதியங்களின் கீழான 95 செயற்திட்டங்களின் 44 சபை பணிகள் மற்றும் 100 நாட்களுக்கான விசேட அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சபையின் பணிகளின் உண்மையான கிரயம் கணிப்பிடப்பட்டிராததுடன், கடந்த ஆண்டிற்கு ஒப்பாக சபையின் பணிகளின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய PFD/RED/01/01/2014/01 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளக்க கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 (1) (அ) (1) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிராததுடன், உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக போதியளவிலான பதவியணியொன்று இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.4 ஊழியர் கடன்**

இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 708,303 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாறு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், 23 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 148,098 தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட முடியாத கடனாக அறவிடப்பட்டது. இதற்காக காலப்பகுக்காய்வொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) கணக்கீடு

(ஈ) வருமான நிர்வாகம்